மத்தியமாகாணக் கல்வித் திணைக்களம்
கண்டி
புலமைப்பரிசில் பரீட்சை- 2020
பயிற்சி வினாப்பத்திரம் இலக்கம் 04

பகுதி 1 நேரம் 45 நிமிடம்

❖ ஓவ்வொரு வினாவிற்கும் மூன்று விடைகள் தரப்பட்டுள்ளன. அவற்றிடையே ஒவ்வொரு வினாவிற்கும் உரிய சரியான விடையைத் தெரிவு செய்து அதன் கீழ்க் கோடிடுங்கள்.

❖ 1 ஆம் 2 ஆம் வினாக்களில் முதலில் தரப்பட்டுள்ள உருவை பூர்த்தி செய்வதற்குப் பொருத்தமான பகுதியைத் தெரிவு செய்க.

1.



2.




1) 2) 3)

(1) (2) (3)


❖ பின்வரும் உருக்களில் ஒன்று வேறுபடுகிறது. அவ்வுருவின் கீழ் கோடிடுக.

3.



1) 2) 3)

4.



1.) 2) 3)

❖ 5,6 ஆகிய வினாக்களில் தரப்பட்டுள்ளவற்றில் மூன்றை ஒரு கூட்டமாகவும் இரண்டை வேறொரு கூட்டமாகவும் **வேறுபடுத்**தலாம் . அவ்விரு கூட்டங்களையும் சேராதது எது எனத் தெரிவு செய்க.

5. சதுரம், கனவுரு, சதுரமுகி, செவ்வகம், பெட்டி, நான்முகி


1) சதுரம் 2) பெட்டி 3) நான்முகி

6. சாகரம், நீர், பரவை, புள், கடல், பட்சி


1) புள் 2) நீர் 3) கடல்

www.lkedu.lk

❖ 7,8 ஆகிய வினாக்களில் △ = 2, ▲ = 3, ▭ = 5, ▬ = 6, # = 8 என இட்டு வெற்றிடத்திற்கு பொருத்தமான விடையை தெரிவு செய்க.


7. 

1) △△ 2) ▬▬ 3) ##

8. 

1) ▲▲▲ 2) ▬▬▬ 3) △△△

9. ஒரு விரிக்கப்பட்ட சதுரமுகியில் காணப்படும் எதிர்ப்பக்கங்களின் கூட்டுத்தொகை 4, 12, 20 ஆகும்.




வினாக்குறி இடத்தில் வரவேண்டிய எண் பெறுமதி?


1) 1 2) 7 3) 11


10. ஒரு வியாபாரியிடம் படித்தராசும், 3kg 2kg 5kg ஆகிய நிறைகளையுடைய படிகள் மூன்று மட்டும் கொடுக்கப்பட்ட போது ஒரே தடவையில் 4 kg அரிசியை அளந்து கொடுக்க

1) முடியும் 2) முடியாது 3) மேலும் படிகள் தேவை

11. மூன்று ஈர்க்கு சட்டகங்கள் கீழே காணப்படுகின்றன. முனை G இல் இருந்து ஓர் எறும்பு ஒரே பாதையில் இரு தடவைகள் செல்லாமல் எல்லா பாதைகளிலும் செல்லத்தக்க சட்டகம் யாது?

1) 

2) 

3) 

12. "நோய்த் தொற்றுக்கு உள்ளாகாதிருக்க கைகளை ஒருவர் 20 நொடிகள் சவர்க்காரம் இட்டு நன்றாக கழுவ வேண்டும்". என சுகாதார அமைச்சு அறிவுறுத்தல் வழங்கியுள்ளது. எனவே ஒரே சந்தர்ப்பத்தில் 10 நபர்கள் கைக்கழுவுவதற்கு தேவையான நேரம் எவ்வளவு?

1) 200 நொடிகள் 2) 10 நொடிகள் 3) 20 நொடிகள்

- 13, 14 ஆம் வினாக்களில் எண்கள் அமைந்துள்ள விதத்தைப் பார்த்து விடையைத் தெரிவு செய்க.


13. இக்கோலத்தில் C,D ஆகியவற்றிற்குப் பொருத்தமான எண்கள் முறையே யாவை?


9		8		7		6		5		
10	19	18	26	24	31	28	34	C	D	30
	1		2		3		4		5	


1) 30 உம் 35 உம் 2) 40 உம் 45 உம் 3) 33 உம் 38 உம்

www.ikedu.lk

14.







1) 4 2) 5 3) 3

15. மக்கள் பொருட்களை கொள்வனவு செய்வதற்காக சதொச நிறுவனத்திற்கு முன்பாக வரிசையாக நின்றனர் அதன்போது பாதுகாப்பு உத்தியோகத்தர்கள் சில அறிவுறுத்தல்களை பின்பற்றுமாறு கூறினர். அவை கீழே தரப்பட்டுள்ளது..

- முதலாவதாக நிற்கவேண்டியவர் வயதான பெண் - OF
- இரண்டாவதாக நிற்கவேண்டியவர் வயதான ஆண் - OM
- மூன்றாவதாக நிற்கவேண்டியவர் யுவதி – G
- நான்காவதாக நிற்கவேண்டியவர் இளைஞன் - B

இவ்வறிவுறுத்தல்களை முறையாக மக்கள் பின்பற்றுவார்களானால் 55 ஆவதாக நிற்பவர் யாராக இருக்ககூடும்.

1) OF 2) G 3) B


16. ஒரு தொட்டியில் காணப்படும் பூக்கள் ஒவ்வொருநாளும் இரட்டிப்பாகும் தன்மை கொண்டவை அத்தொட்டியில் 5 பூக்கள் முதலில் காணப்பட்டன. 20 வது நாள் அத்தொட்டி முற்று முழுதாக நிரம்பிக் காணப்பட்டது. அத்தொட்டி பூக்களால் அரைவாசி நிரம்ப எடுத்துக்கொண்ட நாட்கள்.

1) 19 நாட்கள் 2) 10 நாட்கள் 3) 4 நாட்கள்.

17. நானும் எனது தந்தையும் நிறைகளை அளந்த போது எனது நிறையின் நான்கு மடங்கு நிறை தந்தையினுடையதாக இருந்தது. இருவரினதும் மொத்த நிறை 100 kg எனின் எனது நிறை யாதாக இருக்கும்?

1) 50 kg 2) 20 kg 3) 30 kg

18. சிவப்பு, நீலம், மஞ்சள், வெள்ளை, கறுப்பு என்னும் ஐந்து நிற கீற்றுக்களைக் கொண்ட கொடி உருவில் தரப்படுகிறது.



1 2 3 4 5

- மூலவர்ணங்கள் அருகருகே அமையப் பெறவில்லை.
- வெள்ளையில் இருந்து 4 வதாக மஞ்சள் கொடியும்.
- சிவப்பு கொடிக்கும் , மஞ்சள் கொடிக்கும் இடையில் கறுப்பு கொடியும் உள்ளது.
- நான்காவதாக கறுப்பு கொடியுள்ளது. ஆகவே,

19. கொடிக்கீற்றில் 1 வது, 3 வது கொடிகளின் நிறங்கள் முறையே.

1) நீலம், மஞ்சள் 2) நீலம், சிவப்பு 3) சிவப்பு, கறுப்பு.

www.kedu.lk

20. ஒரு மைதானத்தில் முச்சக்கர வண்டிகளும் கார்களுமாக 12 வாகனங்கள் நிறுத்தப்பட்டிருந்தன. அவற்றில் காணப்படும் சில்லுகளின் எண்ணிக்கை 39 எனின். அங்குள்ள கார்களின் எண்ணிக்கை.
1) 3 2) 9 3) 8

21. மாணவன் ஒருவன் ஓர் எண்ணுடன் 70 ஐ கூட்டுவதற்கு பதிலாக தவறுதலாக 70 ஐ கழித்துவிட்டான். அப்போது பெறப்பட்ட விடை 140 எனின், உண்மையில் மாணவன் பெற வேண்டிய விடை
1) 210 2) 280 3) 70

22. ராஜா குமாருக்கு முன்னரே நூலகத்திற்கு வந்த அதே வேளை குமாருக்கு பின்னரே நூலகத்திலிருந்து வெளியேறினான். ராகுல் குமாருக்குப் பின்னரே நூலகத்திற்கு வந்த அதே வேளை ராஜாவிற்கு முன்னரே நூலகத்திலிருந்து வெளியேறினான் எனின் கூடுதலான நேரம் நூலகத்தில் இருந்தவர் யார்?
1) ராகுல் 2) ராஜ 3) குமார்

❖ R .453.18 ஐக் குறியீடுகளில் R . CFD. BG எனக் காட்டலாம் எனின்.


23. ரூ. 1853.34 ஐ எவ்வாறு காட்டலாம்?
1) R. AHEC.CD 2) R. BGFD.DC 3) R. BGFD.BG

24. R. ABCD.EF இனால் காட்டப்படுவது யாது?
1) ரூ. 1234.56 2) ரூ. 2134.65 3) ரூ. 2143.65

25. நோய் தொற்றிலிருந்து பாதுகாப்பு பெறுவதற்காக வரிசையில் நிற்கும் நபர்களுக்கிடையில் 1 மீற்றர் அளவிலான இடைவெளியை பேணவேண்டும் என சுகாதார அமைச்சு அறிவுறுத்தல் வழங்கியது. இதற்கேற்ப ஒருவர் நிற்பதற்கு 15 சென்றிமீற்றர் அடையாளமிடப்பட்டுள்ளது. இவ்வரிசையில் 20 நபர்கள் நிற்பதற்கு தேவையான மொத்த இடம் எவ்வளவு
1. 20 மீற்றர் 2) 19 மீற்றர் 3) 22 மீற்றர்

26. கமலிடம் இரண்டு ரூபாய் நாணயங்களாகவும் ஐந்து ரூபாய் நாணயங்களாகவும் ரூ.23 உள்ளது. அதில் இருக்கதக்க இரண்டு ரூபாய் நாணயங்களின் எண்ணிக்கை யாது?
1) 3 2) 6 3) 4

27. உருவில் காணப்படும் முக்கோணங்களின் எண்ணிக்கையும் செங்கோணங்களின் எண்ணிக்கையும் முறையே.



1) 3, 3 ஆகும் 2) 3, 5 ஆகும் 3) 2, 5 ஆகும்

28. இருபத்தாறாயிரத்து நூற்று ஆறு என்ற எண்ணிலுள்ள இலக்கங்களை இறுதியிலிருந்து முதலில் வருமாறு எழுதும் போது வரும் எண் எது?
1) 66102 2) 60162 3) 62016

29. 175, 125, 141, 132 என்னும் எண்களை ஏறுவரிசையில் எழுதும்போது கிடைக்கும் முதலாம் எண்ணினதும் மூன்றாம் எண்ணினதும் நடுவில் இருக்கும் இலக்கங்கள் முறையே
1) 2, 3 2) 2, 4 3) 7, 4

www.ikedu.lk


30. 1 தொடக்கம் 100 வரை எண்களை எழுதும்போது இலக்கம் 2 எத்தனை தடவைகள் எழுதப்பட வேண்டும்?

1) 10 2) 19 3) 20

31. ஒரு நூலகத்தில் உள்ள நூல்களுக்கு இலக்கம் 951 தொடக்கம் 1010 வரை இலக்கங்கள் இடப்பட்டிருந்தன எனின், அங்குள்ள புத்தகங்கள் எத்தனை?

1) 59 2) 60 3) 61

32. தரம் 5 பிள்ளைகள் சிலரின் விருப்பமான விளையாட்டுக்களை உரு காட்டுகிறது.



33. மூன்று விளையாட்டுக்களையும் விரும்பும் பிள்ளை யார்?

1) பாபு 2) நிமல் 3) சுமன்

34. கிறிக்கட்டையும், வொலிபோலையும் விரும்புபவரும் காற்பந்தை விரும்பாதவருமான பிள்ளை.

1) அமல் 2) கமல் 3) விமல்

- 35 , 36 ஆம் வினாக்களில் தரப்பட்டுள்ள கூற்றுக்களுக்கு பொருத்தமான விடையைத் தெரிவு செய்க.

35. பாடசாலை விளையாட்டுப் போட்டியில் கவிதரன் மூன்று விளையாட்டுக்களில் முதலிடம் பெற்று சம்பியன் ஆனான். கவிதரன் சம்பியன் ஆனதற்கு பொருத்தமான காரணமாக இருக்கக் கூடியது.

1) ஏனைய போட்டியாளர்கள் பலவீனமாக இருந்தமை.
2) அவன் கடுமையாக பயிற்சி செய்தமை.
3) அவன் விளையாட்டுப் பொறுப்பாசிரியருடன் நெருக்கமாக இருந்தமை.

36. ஆசிரியர் கமலன் தங்கள் பாடசாலையில் இவ்வருடம் வழமையை விட அதிக மாணவர்கள் புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தியெய்தியுள்ளார்கள் எனக் கூறினார். அதற்கான காரணமாக அமையக் கூடியது.

1) இவ்வருடம் பரீட்சை இலகுவாக அமைந்தமை.
2) இவ்வருடம் வெட்டுப்புள்ளி குறைந்தமை.
3) இவ்வருடம் மாணவர்கள் அதிக ஆர்வத்துடன் படித்தமை.

37. ஒரு ஒற்றை எண்ணை இன்னுமோர் ஒற்றை எண்ணால் பெருக்கினால் வரும் விடை யாது?

1) ஒரு ஒற்றை எண் பெறப்படும்
2) ஒரு இரட்டை எண் பெறப்படும்.
3) ஒற்றை எண் அல்லது இரட்டை எண் பெறப்படும்.

www.lkedu.lk

38. இன்று ஞாயிற்றுக் கிழமையாகும். நேற்று முன்தினத்திற்கும் (முந்த நாள்) கடந்த திங்கட்கிழமைக்குமிடையே எத்தனை நாட்கள் இருந்தன.

1) 1 2) 2 3) 3

39. மோகனும் ரவியும் ஒரு வட்ட ஓட்டப் பந்தயப் பாதையில் ஓட்டத்தை ஆரம்பித்தனர். ரவி அரைச் சுற்று ஓடும்போது மோகன் ஒரு சுற்றை ஓடி முடித்து முன்னோக்கி வந்து ரவியைக் கடந்தான். இதற்கேற்ப.

1) மோகனின் கதி ரவியின் கதியின் மூன்று மடங்காகும்.
2) மோகனின் கதி ரவியின் கதியின் இருமடங்காகும்.
3) ரவியின் கதி மோகனின் கதியின் மூன்று மடங்காகும்.

40. ஒரு பணப் பையில் ரூ. 640 பணம் நான்கு நாணயத் தாள்களாக உள்ளன. அவை

1) ரூ. 500 , ரூ. 100, ரூ. 20 ஆகியன உட்பட 4 நாணயத் தாள்கள்.
2) ரூ. 500, ரூ. 20 ஆகியன உட்பட 4 நாணயத் தாள்கள்.
3) ரூ. 500 , ரூ. 50, ரூ. 20 ஆகியன உட்பட 4 நாணயத் தாள்கள்.

www.lkedu.lk